செ.வெ. எண்: 391 நாள்: 07.07.2012

## செய்தி வெளியீடு

ஒரு மாநிலம் வளம் நிறைந்ததாக இருக்க வேண்டுமாயின், அங்கு மனித வளமும், செயற்கை வளமும் அமைந்தால் மட்டும் போதாது; கடத்தல், பதுக்கல், வரி ஏய்ப்பு போன்ற சமூக விரோதச் செயல்கள் தடுக்கப்படவும் வேண்டும். தமிழக எல்லைப் பகுதிகளில் உள்ள வணிகவரித் துறை சோதனைச் சாவடிகள் வரி ஏய்ப்பினை தடுப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன.

இந்தப் பணியினை அரசுத் துறைகள் இணைந்து திறம்பட ஆற்றும் வகையில், திருவள்ளூர் மாவட்டத்தின் எல்லைப் பகுதியிலுள்ள பெத்திக்குப்பத்தில் உள்ள சோதனைச் சாவடியை அனைத்து வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த நவீன சோதனைச் சாவடியாக உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து, தற்பொழுது புழல் (உள்ளே), புழல் (வெளியே), கே.ஜி. சாவடி (உள்ளே), கே.ஜி.சாவடி (வெளியே), ஒசூர் (உள்ளே), ஒசூர் (வெளியே), தொப்பூர் (உள்ளே), தொப்பூர் (வெளியே), பன்னாரி, ராணிப்பேட்டை (உள்ளே), ராணிப்பேட்டை (வெளியே), காட்பாடி, கண்டமங்கலம், புளியரை, களியக்காவிளை ஆகிய 15 பெரிய சோதனைச் சாவடிகள்; திருத்தணி, ஊத்துக்கோட்டை, பீச்சானூர், கூடலூர், கோபாலபுரம், மீனாட்சிபுரம், தரங்கம்பாடி, மேல்வாஞ்சூர், கோட்டக்குப்பம், பட்டனூர், பெண்ணையாறு பாலம், லோயர் கேம்ப், போடி மெட்டு ஆகிய 13 இடங்களிலுள்ள சிறிய சோதனைச் சாவடிகள்; Concor (Chennai I), இராயபுரம், எழும்பூர் ரயில்வே சரக்குகள் இறக்குமிடம், மத்திய பார்சல் அலுவலகம், சென்னை துறைமுகம், சால்ட் கோட்டர்ஸ், ஆகாய விமான கார்கோ வளாகம், தூத்துக்குடி துறைமுகம் ஆகிய 8 இடங்களிலுள்ள சோதனை முனையங்கள் ஆகியவற்றினை சிறந்த உள் கட்டமைப்பு வசதிகளுடன் புதுப்பிக்க 33 கோடியே 36 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் அனைத்துச் சோதனைச் சாவடிகளும் புதுப்பிக்கப்படுதல், புதிய வாகனங்கள் வாங்குதல், சோதனைச் சாவடிகளை கடந்துச் செல்லும் வாகன எண்களை பதிவு செய்யும் கருவிகள் வாங்குதல், தடைபடாத மின் விநியோகத்திற்கான சாதனங்கள் வாங்குதல்; பொருட்களை காப்பதற்காக வைப்பு அறை கட்டுதல்; பணியாளர்களின் நலனுக்காக அவர்களுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளான குடிநீர் வழங்குதல்; கழிப்பறை கட்டுதல்; பொருட்களின் நடமாட்டத்தை கண்காணித்தல்; வரி ஏய்ப்பினை கண்டறிதல்; கூடுதல் பணியாளர்களை நியமித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

சோதனைச் சாவடிகள் நவீனமயமாக்கப் படுவதன் மூலம், அதிக வாகனங்கள் குறைவான நேரத்தில் கையாளப்படுவதோடு, வாகனங்கள் அதிக நேரம் நிற்பது தவிர்க்கப்படும். இது மட்டுமல்லாமல் பொருட்கள் குறிப்பிட்ட இடத்திற்கு விரைவில் சென்றடையவும் வழிவகை ஏற்படும். மேலும், வரி ஏய்ப்பு முழுவதுமாக கட்டுப்படுத்தப்படும். இந்த நடவடிக்கை மாநிலத்தின் வரி வருவாய் அதிகரிக்க உறுதுணையாக இருக்கும்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 7.7.2012